செய்தி வெளியீடு எண்:940 நாள்:25.10.2021

<u>செய்தி வெளியீடு</u>

இன்று (25.10.2021) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ‘முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரையாற்றி இக்கூட்டத்தைத் துவக்கி வைத்தார். பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் அவர்கள் உரையாற்றினார். மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இக்குழுவின் முதலாவது கூட்டத்திலும், அதனைத் தொடர்ந்தும் உறுப்பினர்கள் வழங்கிய ஆக்கப்பூர்வமான ஆலோசனைக்ளைக் கருத்தில் கொண்டு 2021-22 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதியோர் ஓய்வூதிய திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை உயர்த்தியது, ‘மக்களைத் தேடி மருத்துவம்’ எனும் புதிய திட்டத்தை தொடங்கியது, கொரோனா நோய்த் தொற்றை பரவாமல் தடுக்கும் வகையில் தகுதியுடைய மக்களுக்கு 72 விழுக்காட்டினருக்கு ஒரு டோஸ் தடுப்பூசி செலுத்தியது, நோய்த் தொற்றின் காரணமாக இழந்த பள்ளிப் படிப்பினை ஈடுசெய்யும் வகையில் ரூ.200 கோடி செலவில் ‘இல்லம் தேடி கல்வி’ என்ற மாபெரும் திட்டத்தினை நடைமுறைபடுத்துதல், தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் முடிவுகளின் காரணமாக அரசின் அரிய நிதியினை வீணாகாமல் தடுத்தது, சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில்

நிலுவைக் கடனை மாற்றியமைப்பதற்கு ரிசர்வ் வங்கியின் உதவியைப் பெறுவது போன்று பல்வேறு திட்டங்கள் அறிவித்ததை சுட்டிக்காட்டினார்.

மேலும், அரசின் செயல்பாடுகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், அரசின் நிதிநிலையினை திறம்பட கையாள்வதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொருளாதார ஆலோசனைக் குழுவிடம் பின்வரும் கருத்துகளை கேட்டறிந்தார்.

உலக அளவிலும் உள்நாட்டு அளவிலும் மின்சாரம்-எரிசக்தித் துறையில் ஏற்பட்டுள்ள நிலக்கரி தட்டுப்பாடு உட்பட நெருக்கடிகளை தொலைநோக்கு அடிப்படையில், செயல்பாடுகளை மேற்கொள்ளுதல், அரசின் முக்கிய தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான குடும்பத் தலைவிகளுக்கு மாதாந்திர அடிப்படை உரிமைத் தொகை வழங்குவதைச் செயல்படுத்துவதற்கான சிறந்த வழிமுறைகளை தெரிவு செய்வது, கொரோனாவுக்குப் பிந்தைய நிலையில் விளிம்பு நிலையில் உள்ளோரை தொடர்ந்து பாதுகாப்பதுடன், இணைந்து வளர்ச்சியையும் முதலீட்டினையும் மீட்டெடுத்தல், தமிழ்நாட்டில் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கான தமிழ்நாட்டிற்கென உள்ள தனிச்சிறப்பான வலிமைகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல், அரசின் கடன்சுமையைக் குறைத்து சரியான அளவில் கடன் அளவுகளை நிர்ணயித்தல். தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்களை உறுப்பினர்கள் வரவேற்றனர்.

பல்வேறு சமூக நலத் திட்டங்களை மேலும் எளிதில் அணுகுவதை அரசு கருதலாம் என பொருளாதார அறிஞர் திருமதி எஸ்தர் டப்லோ கூறினார். பெரும் முதலீட்டு

திட்டங்களுக்குத் தேவையான அனுமதிகளை விரைவில் வழங்கும் நடைமுறைகள், தமிழ்நாட்டின் மாணவர்கள் உலகத் தரம் வாய்ந்த கல்வி பெறும் வகையில்

உயர்கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கான முதலீடுகளை மேற்கொள்ளுதல் போன்ற பரிந்துரைகளை டாக்டர் ரகுராம் ராஜன் வழங்கினார். மேலும் கடன் அளவை பற்றி அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் கூறினார். நடைமுறையில் உள்ள 9 முக்கியமான திட்டங்கள் உட்பட விடுபட்ட கூறுகளை ஒன்றிணைத்து ஒரு சமூக பாதுகாப்பு கட்டமைப்பை நிறுவுவதற்கு பேராசிரியர் ஜீன் டீரீஸ் முன்மொழிந்தார். இதற்காக ஒரு வலுவான, வெளிப்படையான பொறுப்புடைய அமைப்பின் அவசியத்தைப் பற்றி கூறினார்.

Quasi universial basic income திட்டத்தை செயல்படுத்த சாத்தியமான வழிமுறைகள், உலக அளவில் ஆற்றல் நிலை மற்றும் பொருளாதார வேகத்தை நிலைநாட்டுவதன் தேவை பற்றி டாக்டர் அரவிந்த் சுப்ரமணியன் கூறினார். மாநிலத்தின் மின் துறை நிலைக்கான தொழில்நுட்ப ரீதியான தீர்வுகளை டாக்டர் எஸ். நாராயணன் ஆலோசனை வழங்கினார்.

இறுதியாக, தலைமைச் செயலாளர் திரு. வெ. இறையன்பு அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9